

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.6.2025) சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி உடனிருந்தனர்.

### புதுக்கோட்டையில்

# பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு! புதிய திட்டப்பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

புதுக்கோட்டை, ஜூன் 14 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 11.06.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.399.81 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 102 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.975.63 கோடி மதிப்பீட்டில் 108 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கல்வி ஊக்கத்தொகை மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பேரூராட்சி, மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் கலந்து கொண்டார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் முன்னேற்றம் அடைந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி யில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.399.81 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 102 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.975.63 கோடி மதிப்பீட்டில் 108 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கல்வி ஊக்கத்தொகை மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இதில், துணை முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.2.18 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தையினையும், அரிமளம் பேரூராட்சியில், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.8.43 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் அபிவிருத்தி பணியினையும், ஆலங்குடி பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.2.08 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தையினையும், கறம்பக்குடி

பேரூராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில், ஆறாவது மாநில நிதி முழு பரிந்துரையின்படி பள்ளி மேம்பாட்டு நிதியின் கீழ் தலா ரூ.0.54 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து, ஆலங்குடி பேரூராட்சி, மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இது போன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ஜீவா சுப்பிரமணியன், பேரூராட்சி செயல் அலுவலர் அ.சுந்தரராஜன், ஆலங்குடி வட்டாட்சியர் பி.வில்லியம் மோசஸ் மற்றும் பழனிக்குமார், தங்கமணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், ராங்கியம் வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 11.06.2025 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில், பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, வாங்கல் குப்புச்சிபாளையம் ஊராட்சி, வாங்கல் பழைய வாங்கலம்மன் கோவில் சாலை முதல் ஈஸ்வரன் கோவில் சாலை வரை, தார்ச் சாலையை மேம்படுத்தும் பணிகளை மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் , உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.





